இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 4
இறுதிப் பரீட்சை 2007
குற்றவியல் சட்டம் - LWU 2312
காலம்: 03 மணித்தியாலம்

திகதி: 08.03.2007 நேரம்: மு.ப 10.00 – பி.ப 1.00 மணி வரை

ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. "சட்டத்திற்கமைய, ஒரு மனிதன் தன்னுடைய தன்னிச்சையான செயலின் விளைவுகளை அறிந்து ஒரு செயல் நிச்சயமாக நடைபெறும் என விரும்புகின்ற போது அவன் அச்செயல் நடைபெறும் என எதிர்பார்ப்பினும் எதிர் பார்க்காவிட்டாலும் அதனுடைய விளைவுகளை அவன் அறிவான் அல்லது தான் விரும்பினாலும் அல்லது விரும்பாவிட்டாலும் அச்செயல் நிச்சயம் நடைபெறும் என்பதை எதிர்பார்ப்பான்".

   மேலே தரப்பட்ட கூற்றையும் தீர்க்கப்பட்ட வழக்குகளையும் அடிப்படையாக கொண்டு குற்றமனம் என்ற கருத்தேற்பின் அடிப்படை கூறுகளை ஆராய்க.

2. "குற்றவியல் பொறுப்புடமை தோன்றுவதற்கு இறந்த நபருக்கு ஆபத்து ஏற்படுத்திய செயலுக்கும் அவனுடைய இறப்புக்கும் இடையில் நேரடி தற்செயலான தொடர்பு ஒன்று இருத்தல் வேண்டும்".

   தீர்ப்புச்சட்டங்களை கொன்டு இக்கூற்றை விமர்சித்து ஆராய்க.

3. வீர், சாரா ஆகிய இருவருக்கும் இடையில் நெருங்கிய நட்பு ஒன்று இருந்ததுடன் அவர்கள் இருவரும் சுமார் இரண்டு வருடங்களாக ஒன்றாக சேர்ந்து வெளியிடங்களுக்கு சென்று வருகிறார்கள். பிரபல்யம் அடைந்து வரும் நடிகையான கறிஸ்மா உடன் வீர் தொடர்பு ஒன்றை ஏற்படுத்தியதை தொடர்ந்து வீர, சாரா இருவருக்கிடையிலுமான நட்பு முடிவுக்கு வந்தது.

   வீர், கறிஸ்மா ஆகிய இருவரையும் விருந்து வைபவம் ஒன்றிலே சாரா சந்தித்ததுடன் சாராவுக்கும் வீர்க்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. தூஷன வார்த்தைகள், பலத்தசத்தம் என்பவற்றை தொடர்ந்து அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு சாரா, வீரை வேண்டினாள். வீர் வெளியேற மறுத்த போது சாரா கையிலிருந்து பானத்தை அவன் மீது ஊற்றினாள். வீர் சாராவை சுவரிலே சார்த்தி வைத்து அவள் முகத்தில் அறைந்தான். சாரா கையிலிருந்த கோப்பையினால் வீரை தாக்கினாள். கோப்பை உடைந்து வீரினுடைய முகத்தை தாக்கியதுடன் அதன் விளைவாக அவனுடைய கண்கள் கடுமையான பாதிப்புக்கு உட்பட்டன.
   தற்காப்பு உரிமையை தான் பிரயோகித்ததாக சாரா கோருகின்றாள். ஆராய்க.

4. புராதன பொருட்கள் சேகரிப்பாளன் ஒருவனான அமித் தனது அயலவனான சாணக்க என்பவனுடைய வீட்டிலே அவன் மேசை மீது கைவேலைப்பாட்டில் அமைந்த சிறு தட்டு ஒன்று இருப்பதை அவதானித்தான். அத்தட்டத்தை உடனடியாக எடுத்து மறைத்து வைக்க துணிச்சல் இல்லாமை காரணமாக அமித், சாணக்க குறிப்பிட்ட தட்டு காணாமல் போனதைப்பற்றி மறந்தவுடன் அத்தட்டினை மறைத்து வைத்த இடத்தில் இருந்து எடுக்கும் எண்ணத்துடன்

சாணக்கவிற்கு அத்தட்டினை ஒரு போதும் கண்டுபிடிக்க முடியாத ஒரு இடத்தில் மறைத்து வைத்தான்.

ஆராய்க.

5. ஆட்கொலை குற்றம் மற்றும் ஆட்கொலை ஒன்று மனிதப்படு கொலைக்குற்றம் ஒன்றாகக்கூடிய சந்தர்ப்பங்கள் என்பவற்றை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி ஆராய்க.

6. சட்டரீதியான பாதுகாவலரிடம் இருந்து 14 வயது நிரம்பிய யூலியட் என்ற பெண் பிள்ளையை கடத்தியமைக்காக ரோமியோ ஆட்கடத்தல் குற்றம் புரிந்தமைக்காக குற்றம்சாட்டப்பட்டான். தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி கீழே தரப்பட்டுள்ள எதிர்காப்புக்களின் வலிதான தன்மையை கருத்திற் கொள்க.

(i) யூலியட் வீட்டிலே பாடசாலை செல்வதாக பாசாங்கு செய்து வீட்டை விட்டு வெளியே வந்து ரோமியோவுடன் ஓடிப்போவதற்கு அவனை அழைத்தாள் அத்துடன் அவனை பஸ் தரிப்பிடத்தில் வைத்து சந்தித்துள்ளாள்.

(ii) மாலையில் வீட்டிலே கொண்டு வந்து சேர்க்கும் எண்ணத்துடன் மிருகக்காட்சி சாலைக்கு போவதற்கு ரோமியோ அவளை அழைத்துள்ளான்.

(iii) யூலியட் தனக்கு 18வயது என ரோமியோவை நம்ப வதைத்துள்ளாள்.

7. சமையலறையில் பயன்படுத்தும் மிகப்பாரமான பாத்திரமொன்றான சப்பாத்தி தயார் செய்யும் தட்டொன்றைக் கொண்டு அப்துல்கான் என்ற நடுத்தர வயதுடைய வெளிநாட்டவரை மண்டையில் தாக்கி கொலை செய்தமைக்காக உல்லாசப்பிரயாணிகள் இளம் வழிகாட்டியான செல்வன் குற்றம் சாட்டப்பட்டான். கொலை நடந்த நேரத்தில் அப்துல்கானுடைய மாடி வீட்டில் அவர்கள் இருவர் மாத்திரமே இருந்தனர்.

தன்னுடைய மறுப்பை கருத்தில் கொள்ளாது தன்மீது பாலியல் துஸ்பிரயோகத்தை அப்துல்கான் மேற்கொண்டான் என செல்வன் பொலிஸாருக்கு கூறினான் அத்துடன் அவன் தன்னை பார்த்து ஏளனமாக சிரித்ததாகவும் கூறினான். இதன் காரணமான தன்னுடைய சுய கட்டுப்பாட்டை இழந்த செல்வன் சப்பாத்தி தயார் படுத்தும பாத்திரத்தை கொண்டு அப்துல்கானை கடுமையாக தாக்கினான்.

செல்வனுடைய குற்றப்பொறுப்புடமையை ஆராய்க.

8. பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினைப் பற்றி குறிப்பெழுதுக.

(i) சித்தசுவாதீனமின்மை என்ற எதிர்காப்பு
(ii) குற்றவியல் நம்பிக்கை முறிவு குற்றம்
(iii) குற்ற ஒப்புதல்களும் அவற்றினுடைய ஏற்புடமையும்
(iv) சம்மதம் என்ற எதிர் காப்பு

(பதிப்புரிமைபெற்றது)